நெல் கொள்முதல் நிலையங்கள் விவசாயிகளின் நலன் கருதி திறக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

காகித ஆலை

*****52673—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகித ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெற வேண்டுமென்ற குறிக்கோளோடு, "மக்கள் நலனே என் நலன்" என்று செயல்படும் எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவி, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் புதிதாக காகித ஆலை அமைக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அங்கே போதிய கரும்புச் சக்கை இல்லாத காரணத்தினாலும், அங்கே இணை மின் நிலையம் உற்பத்தி துவங்கவிருக்கின்ற காரணத்தினாலும், அதற்கு கரும்புச் சக்கை தேவையிருக்கின்ற காரணத்தினாலும், காகித ஆலை நிறுவ சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை

2015 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இணை மின் உற்பத்தித் திட்டத்திற்குக் கரும்புச் சக்கை தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ளார்கள். இந்த ஆலையில் இணை மின் உற்பத்தித் திட்டம் எப்போது பயன்பாட்டிற்கு வரும்? வேறு ஏதேனும் சர்க்கரை ஆலையிலிருந்து மின் உற்பத்தித் திட்டத்திற்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். ஒரு காகித ஆலை நிறுவப்பட வேண்டுமானால், அதற்கு என்னென்ன மூலப் பொருட்கள் தேவைப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கேள்வி நேரம் என்ற காரணத்தினால் குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது. இருந்தாலும், கடந்த ஆட்சியாளர்களால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு டெண்டர் விடப்பட்டு, இத்திட்டமானது அனைத்து ஆலைகளிலும் செப்டம்பர் 2011–ல் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். அதன்படி, அனைத்து கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 183 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற இலக்கோடு, அவர்கள் தகுதியில்லாதவர்களுக்கு டெண்டர் விட்ட காரணத்தினால், ஒப்பந்ததாரர்களிடம் திட்டப் பணிகள் குறித்து தொடர்ந்து நான்காண்டு காலமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், நானும் ஆய்வு செய்துகொண்டேயிருக்கின்றோம்.

இதற்கிடையில், மாண்புமிகு அம்மா அவர்கள், இத்திட்டத்திற்குப் போதிய நிதியில்லாத காரணத்தினால் 352

கோடி ரூபாயினைக் கடனாகக் கொடுத்திருக்கின்றார்கள். தகுதியில்லாதவர்கள் இதை டெண்டருக்கு எடுத்த காரணத்தினால், தொடர்ந்து இப்பணி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இன்னும் ஆறு மாத காலம் அல்லது ஒரு வருட காலத்திற்குள் இத்திட்டத்தினைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, காகித ஆலை அன்று புதிதாக ஆரம்பிக்கப்படவேண்டுமானால், என்னென்ன வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஒரு காகித ஆலையானது, 400 மெட்ரிக் டன் அளவிற்கு தினந்தோறும் உற்பத்தி செய்தால்தான் இலாபகரமாக இயங்கமுடியும். மேலும், வருடத்திற்கு 6 இலட்சம் டன் கரும்புச் சக்கையும், 1,55,000 மெ.டன் அளவு கூழ் மரமும், இது தவிர தினந்தோறும் 5,000 க.மீ. தண்ணீரும் தேவைப்படுகின்ற காரணத்தினால், அங்கு புதிதாக ஒரு காகித ஆலை துவங்குவதற்கு வாய்ப்பில்லை.

முற்பகல் 10—45

ஏற்கெனவே மோகனூரிலிருந்து 33 கிலோ மீட்டரிலுள்ள கரூர், புகளூர் பகுதியிலே T.N.P.L. என்கின்ற காகித நிறுவனம் இலாபகரமாக இயங்கி வருகின்றது. மோகனூரிலிருந்து 86 கிலோ மீட்டர் தொலைவிலே, அட்டை தயாரிக்கின்ற தொழிற்சாலை நிறுவ மாண்புமிகு அம்மா அவர்களால் ஸ்ரீரங்கத்தில் நடந்த விழாவிலே அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தப் பணிகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன. அந்தத் தொழிற்சாலையும் இந்த ஆண்டு கடைசியிலே தொடங்கப்படவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

2015 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

போக்குவரத்துப் பணிமனை

***44393—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி வட்டம், கல்லலில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் கல்லலிலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள காரைக்குடி பணிமனையிலிருந்து 76 பேருந்துகளும், 38 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிவகங்கை பணிமனையிலிருந்து 80 பேருந்துகளும் இயங்கி வருகின்றன. இரு பணிமனைகளுக்கிடையேயான தூரம் 40 கிலோ மீட்டருக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்ற நடைமுறை விதிகளுக்கேற்ப, கல்லலில் தனியாக ஒரு பணிமனை அமைக்கும் நிலை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லல் என்பது ஓர் ஒன்றியத்தினுடைய தலைநகர் என்ற அடிப்படையில், திருச்சியிலிருந்து காரைக்குடி வழியாக*